Registered as a Newspaper

WHITEFIELD'S GUM
வைட்பீல்ட்ஸ் கம்
பாடசாலைக்கும் கந்தோர் பாவனைக்கும் மிக உகந்தது.

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

BINDER PASTE GUM
கை வேலைக்கும் முக்கியமான ஒட்டு வேலைக்கும் மிகச் சிறந்தது.
WHITEFIELD Industries
CHANKANAI.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மார்கழி மீ 19 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 21 (03-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:- 38

## முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப் பட்டனர்

அம்பாறை, ஜன. 3

நிந்தாவூரில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று கருதப்படும் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் நேற்று அதிகாலை இனந் தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டனர்.

இயக்கங்களின் பெயரில் பல கொள்ளைச் சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

★ வடக்கு, கிழக்கில் நிகழும்

# துப்பாக்கிச் சூட்டு மரணங்கள்; விசாரணை இனிக் கட்டாயம்

## தண்ணீர் தட்டுப்பாடு ரயில் நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். ரயில் நிலையத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது.

நேற்று யாழ்தேவி திடீர் என்று ரத்துச் செய்யப்பட்டதால், தூர இடங்களில் இருந்துவந்த பயணிகள் குடிக்கத் தண்ணீர் இன்றிப் பெரிதும் கஷ்டம் அடைந்தனர்.

## மட்டக்களப்பில் கிரெனேட் வீச்சு!

### 2 பொலீஸார் காயம்

மட்டக்களப்பு, ஜன. 3

மட்டக்களப்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிரெனேட் வீச்சுச் சம்பவம் ஒன்றில் இரு பொலீஸார் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் இடம்பெற்றது.

பொலீஸார் கால்நடையாக ரோந்து சென்று கொண்டிருந்த சமயம் போராளிகள் மறைந்திருந்து கிரெனேட்டுக்களை வீசினர் என்று கூறப்படுகிறது.

பொலீஸார் பதில் தாக்குதல் நடத்திய போது வயோதிப பெண் ஒருவர் காயம் அடைந்தார். இந்த வயோதிபப் பெண் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பொலீஸார் இருவருக்கும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். காயம் அடைந்த பொலீஸாரில் ஒருவர் தமிழர்.

முச்சந்திமுரளி



அப்ப, நேற்று ராத்திரி ரயில்வே ஸ்டேஷனிலை ஒரு சிவராத்திரித் திருவிழா எண்டு சொல்லுங்கோ. எங்கே எந்தப் பக்கத்தாலை ரவுணிலை வேட்டுச் சத்தம் கேட்டதோ எண்டு பிரயாணியள் கண் விழித்திருப்பினம் பின்னை......!

## அவசரகாலச் சட்டத்தின் 55 ஆவது பிரிவின் கீழ் உத்தரவு

—கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர்—

கொழும்பு, ஜன. 3

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்படும் மரணங்கள் குறித்து விசாரணை நடத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதேபோல மரணமானவர்களின் சடலங்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் எரிப்பதற்கு முன்னர் அதிகாரிகள் மட்டத்தில் விசாரணை நடத்தவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் 55ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் புதிய உத்தரவுகள் கடந்த வாரம்முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

துப்பாக்கிச்சூடு பட்டு ஒருவர் இறக்கும் பட்சத்தில் உதவிப் பொலீஸ் அதிபர் (ஏ. எஸ். பி) தரத்திற்குமேல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அதிகாரி விசாரணை நடத்த வேண்டும்.

சம்பவம் நடந்த இடத்திற்கு அவர் சென்று விசாரணை நடத்துவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு விசாரணை நடத்தும் பிரஸ்தாப அதிகாரி தனது அறிக்கையை ஒருவாரகாலத்தினுள் மேல் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

இறந்த ஒருவரின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கலாமா அல்லது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எரிக்கப்படலாமா என்பது குறித்து முடிவுசெய்யும் அதிகாரம் உதவிப் பொலிஸ் மா அதிபர் (டி. ஐ. ஜி) தரத்தில் உள்ள அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மனித உரிமைகளை மீறும் விதத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## நேரடி மோதல்

### உருத்திரபுரப் பகுதியில்

கிளிநொச்சி, ஜன. 3

உருத்திரபுரம் பகுதியில் இராணுவத்தினருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒருவர் பலியானார். நால்வர் கைது செய்யப்பட்டனர்.

மற்றொரு சம்பவத்தில் இ. போ. ச. பஸ் சாரதி ஒருவரும் நடத்துனர் ஒருவரும் காயம் அடைந்தனர்.

புதன்கிழமை மாலை மேற்கண்ட சம்பவங்கள் நடைபெற்றன. அவை பற்றி தெரியவருவதாவது:

தேடுதல் நடவடிக்கைக்காக இராணுவம் இ. போ. ச. பஸ் ஒன்றிலும் தனியார் லொறி ஒன்றிலும் உருத்திரபுரம் 8ம் வாய்க்காலிலுள்ள வீடு ஒன்றுக்கு புதன்கிழமை மாலை சென்றது.

தேடுதலின்போது அவ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

03-01-1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்

6.30 முதல் - 8.00 வரை

ராகு காலம்

11.00 முதல்-12.30வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

நண்பகல்: 11-32ன் மேல் அட்டமி

# இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண தேர்தல் அவசியம்

## சிறிமாவோ சொல்கிறார்

கொழும்பு, ஜன. 3

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பொதுத்தேர்தல் அவசியம் நடத்தப்பட வேண்டும். பொதுத் தேர்தல் வேண்டும் என்ற இயக்கத்தை மும்முரமாக நடத்தப் போகிறேன். அது தான் எனது எதிர்காலப் பணி ஆகும்.

இப்படிக் கூறினார் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

குடியுரிமை மீண்டும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மீது தமிழ்மக்களே நம்பிக்கை இழந்துவிட்டனர்.

போராளிகளுக்கு இடையேயும் கருத்து வேற்றுமைகள்.

எப்படி இவர்களுடன் பேசித் தீர்வு காண்பது?

எனவே பொதுத் தேர்தல் ஒன்றை நடத்திப் புதிய தலைவர்களைத் தெரிவு செய்ய வடக்கு-கிழக்கு தமிழர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

அப்படித் தெரிவு செய்யப்படுபவர்களுடன் பேசித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

ஆகவே நாட்டைச் சிக்கலில் இருந்து மீட்க இன்று தேவை பொதுத் தேர்தல் ஒன்றே!

'சிட்' மூலம் எம். பி. யாகும் எண்ணம் எனக்கு இல்லை.

இன்று இனப்பிரச்சினை தான் முக்கியமானது. இந்த அரசினால் அதைத் தீர்க்க முடியாது.

தீர்வுக்கான பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு தமிழர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

ஆகவே இன்று தேவைப்படுவது பொதுத் தேர்தல் ஒன்றே.

இப்படி திருமதி பண்டார நாயக்கா சொன்னார்.

## சிறிமாவோவுக்கு குடியுரிமை கூட்டணி மகிழ்ச்சி

கொழும்பு, ஜன. 3

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் வட்டுக்கோட்டை முன்னாள் எம்பியுமான டாக்டர் நீலன் திருச்செல்வம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

திருமதி பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப் பட்ட சமயம் அதை எதிர்த்து பலமாகப் போராடியது தமிழர் விடுதலைக் கூட்டணியே.

குடியுரிமை மீண்டும் அவருக்குக் கிடைத்துள்ளது மகிழ்ச்சி தருகின்றது.

உரிய அந்தஸ்து பெற்று இந்நாட்டு அரசியலில் முழுமூச்சுடன் பங்கு ஏற்பதில் அவர் முனைநிற்பார் என்று நம்புகின்றேன்.

குடியுரிமை இழந்த சமயம் அத்தனகலை எம்பியாக அவர் இருந்தார்.

அதே அந்தஸ்தை அவர் மீண்டும் பெறுவார் என்று நம்புகின்றேன்.

இப்படி டாக்டர் நீலன் திருச்செல்வம் சொன்னார்.

## யாழ்தேவி பயணிகளுக்கு இன்று போய் நாளை வா அநுபவம்!

### ரயில் நிலையத்தில் இரவுத் தங்கல்

— அலுவலகச் செய்தியாளர் வனிராஜ் —

யாழ்ப்பாணம், ஜன. 3

எஞ்ஜின் கோளாறு காரணமாக5 மணித்தியாலங்கள் பிந்தி வந்த யாழ்தேவி, மேலிடத்தில் இருந்து வந்த திடீர் உத்தரவைத் தொடர்ந்து நேற்று கொழும்புக்குத் திரும்பிச் செல்லவில்லை.

இதனால் கொழும்பு செல்ல யாழ் ரயில் நிலையத்தில் திரண்டு நின்ற சுமார் 1, 500 பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியதாயிற்று.

யாழ் ரயில் நிலையத்தில் இருந்து யாழ்தேவி இன்று(வெள்ளி) காலை 8.30 மணிக்குப் புறப்படும்.

பாதுகாப்புக் காரணம் கருதியே நேற்று யாழ்தேவி திரும்பிச் செல்ல இருந்தது ரத்துச் செய்யப்பட்டது.

ஏமாற்றம்அடைந்த பயணிகள் இரண்டு பஸ்களில் வீடு திரும்பிச்சென்றனர். பயணிகளில் ஒருவரான பேராசிரியர் கா. சிவத்தம்பி வட பிராந்திய போக்குவரத்துச் சபை தலைவருடன்தொடர்பு கொண்டு இரு பஸ்களை ஏற்பாடு செய்தார்.

தூர இடங்களில் இருந்து வந்த 50க்கு மேற்பட்ட பயணிகள் இன்று பயணம் செய்வதற்காக ரயில் நிலையத்திலேயே தங்கி இருந்தனர்.

கொழும்பில் இருந்து நேற்று வந்த யாழ்தேவி, பரந்தனுக்கும் பளைக்கும் இடையில் வைத்து எஞ்ஜின் கோளாறு காரணமாகத் தாமதமாகியது.

காங்கேசன்துறையில் இருந்து எஞ்ஜின் ஒன்று போய், யாழ்தேவியை இழுத்துக் கொண்டு வந்தது.

## வந்தாறுமூலையில் ஏழு கட்டடங்கள் தகர்ப்பு

மட்டக்களப்பு, ஜன. 3

வந்தாறுமூலையில் 7அரசாங்கக் கட்டடங்கள் இனந்தெரியாத நபர்களால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடந்தது. இந்த 7 கட்டடங்களுடன் கடந்த மாதம் சுமார் 32 அரசாங்க கட்டடங்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை தகர்க்கப்பட்ட கட்டடங்களில் வந்தாறுமூலை கமநலசேவை நிலைய கட்டடமொன்றும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தொழிற் பயிற்சி நிலையத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட ஆறு கட்டடங்களும் அடங்குகின்றன.

13ம் திகதி ஆயித்தியமலைப்பகுதியில் கமநல நிலையம். கிராம அபிவிருத்தி நிலையம், கலாச்சார மண்டபம் உட்பட 7 கட்டடங்கள்.

14ம் திகதி தேவபுரத்தில் அரிசிஆலை, ஊழியர் விடுதி 9 கட்டடங்கள்.

கித்துள்வெவ பகுதியில் பாடசாலை, அதிபர் விடுதி, குடியேற்ற அதிகாரி அலுவலகம் 4 விடுதி

(4-ம் பக்கம் பார்க்க)

## விபத்தில் நால்வர் மரணம்

சென்னை, ஜன 2

பஸ்ஸும் லொறியும் மோதியதில் 4 பேர் மரணம் அடைந்தனர்.

சேலம் அருகே இவ் விபத்து இடம் பெற்றது.

அண்ணா போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான பஸ்ஸும் லொறி ஒன்றும் மோதின. பஸ் தலைகீழாகப் புரண்டது.

பஸ் பயணி ஒருவர் அந்த இடத்திலேயே இறந்தார். மூன்று பேர் சேலம் அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்கள். 59 பயணிகள் காயம் அடைந்தனர்.

## பொங்கல் முதல் புத்தாண்டுவரை பிரார்த்தனை

### காலமாக அனுஷ்டிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3

தைப்பொங்கல் தினம் முதல் சித்திரைப் புத்தாண்டுவரை அமைதிப் பிரார்த்தனைக் காலமாக அனுஷ்டிக்கும்படி இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு பருத்தித்துறைப் பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக பருத்தித்துறைப் பிரஜைகள் குழு வெளியிட்ட அறிக்கை வருமாறு:

சமாதானம், அமைதி என்பன 1983-ல் இருந்து இந்த நாட்டில் அருகி வருவதை எல்லாரும் அறிவார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் வேண்டித் தவிக்கிறார்கள். அந்த அளவுக்கு நிலைமை கொடூரமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எமக்குத் தெய்வம்தான் துணை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய முன்னணிக்கு புத்துயிரா?

கொழும்பு, ஜன. 3

1970 - 77ஆம் ஆண்டுகளில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் இயங்கிய ஐக்கிய முன்னணிக்கு புத்துயிர் அளிக்கப்பட உள்ளதா?

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் உயர் வட்டாரங்களில் ஐக்கிய முன்னணியை மீண்டும் அமைப்பதுகுறித்து தீவிர பேச்சுக்கள் நடைபெற இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய முன்னணியை அமைக்கும் சாத்தியம் உருவாகி இருப்பதாகவும் சொல்லப்பட்டது.

குடியுரிமை பறிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுத்தேர்தல் ஒன்று நடத்தலாம் என்ற பரவலான பேச்சு அடிபடுகிறது.

அதனால் முன்னைய ஐக்கிய முன்னணியை மீள அமைத்துத் தேர்தலில் போட்டியிடலாம் என்ற கருத்து ஒற்றுமை மூன்று கட்சி உயர்மட்டங்களிலும் நிலவுவதாக அறிய வந்துள்ளது.

## லொறியில் வந்து சுற்றிவளைத்து சுட்டனர்

### கனகபுரத்தில் காயம் அடைந்த பெண் தகவல்

நல்லூர், ஜன, 3

லொறியில் வந்த 25க்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் எனது வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டனர். அவர்கள் நான்கு பக்கங்களாலும் சுடத்தொடங்கினர். இதனால் எனது கையில் காயமேற்பட்டது.

கனகபுரம் என்றஇடத்தில் சிறுடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மார்க்கண்டு ஞானேஸ்வரி (வயது 24)

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி சினிமா

## அர்ஜுனுக்குப் பாடம் புகட்டினார் குள்ளமணி

கன்னட நடிகரான அர்ஜுன் தமிழ்த் திரையுலகின் இன்றைய 'பிஸி' நடிகர். அவருக்கு இப்போது நிறைய வாய்ப்பு.

அவரிடம் "விஜயகாந்த் நடிப்பு பற்றி என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்கப்பட்டது.

அதற்கு அர்ஜுன் "யாரு ரஜனிகாந்த் படங்களில் டூப் போடுவாரே அவர் தானே?" என்று கேட்டிருக்கிறார்.

விஜயகாந்தை நன்றாகத் தெரிந்திருந்தும் இப்படிக் கேட்டதும் அருகில் இருந்த குள்ளமணிக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

தமிழ் உணர்வோடு அர்ஜுனை, "பிடி பிடி" என்று பிடித்துவிட்டார் குள்ளமணி குள்ளமணியின் தமிழ் உணர்வு தான் என்னே!

## 'என்றாவது ஒரு நாள்'

தொலைக்காட்சியில் நாடகங்களை அரங்கேற்றிய எஸ். ஜி. சேகர் இப்பொழுது "என்றாவது ஒரு நாள்" என்னும் படத்தை இயக்குகிறார்.

இப்படத்தில் விஜய நிர்மலாவின் மகன் நரேஷ்குமாரும், மாதுரியும் ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள்.

படத்தின் காட்சிகளில் அதிகமானவை வெளிப்புறப் படப்பிடிப்பாகவே இருக்கும்.

## சுஹாசினியின் புதுவித ஆசை

நடிகைகளுக்கு எத்தனையோ ஆசைகள் இருக்கும். ஆனால் சுஹாசினிக்கோ ஒரு புதுவிதமான ஆசை. அவரின் ஆசை என்ன தெரியுமா?

சித்தப்பா கமலுக்கு "ஆஸ்கார் அவார்ட்" கிடைக்க வேண்டும் என்பதே.

"சினிமாத் துறை பல புதுமைகளைச் செய்துவிட்ட—செய்து கொண்டிருக்கும் சித்தப்பாவுக்கு கட்டாயம் "அவார்ட்" கிடைக்கும் என்கிறார் சுஹாசினி.

பல திறமைகள் அமையப் பெற்ற சகலகலா வல்லவன் கமலுக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# வளைகுடா பகுதிகளில் மீண்டும் கடும் போர்

## ஈரானும் ஈராக்கும் எல்லையில் மோதல்

புதுடில்லி, ஜன. 2

வளைகுடாவில் மீண்டும் போர் மூண்டுள்ளது. ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளும் ஒன்றின் மீது மற்றது குண்டு வீச்சுக்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களால் எல்லைப் புறங்களிலுள்ள மக்கள் வாழும் பகுதிகள் பலத்த பாதிப்புகளுக்கிலக்காகியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகள் இரண்டு நாடுகளிலிருந்தும் மாறி மாறிக் கூறப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஈரானின் விமானங்கள் தனது வடக்கு மாகாணப் பகுதிக் கிராமங்களில் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

வடகிழக்கு ஈராக் பகுதியில் தனது விமானங்கள் தகவல் தொடர்பு அமைப்புகள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் கிராமங்களில் குடிமக்கள் வாழும் பகுதிகளில் ஈராக் குண்டுத்தாக்குதல்களை நடத்தியுள்ளது இதனால் முப்பது குடிமக்கள் உண்டுக் காயங்களுக்கு இலக்கானார்.

இதற்குப் பதிலடியாகவே ஈரான் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டதாக அந்த நாட்டின் அதிகாரபூர்வமான செய்திகள் கூறின.

[illegible]

## எந்தத் தாக்குதலையும் லிபியா முறியடிக்கும்

### கடாபி எச்சரிக்கை

லண்டன், ஜன 2

லிபியா மீது மேற்கொள்ளத் திட்டமிடப்படும் எந்தத் தாக்குதலையும் முறியடிக்க எமது நாடு ஆயுத்தமாகவே இருக்கிறது.

மேற்கண்டவாறு லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி பத்திரிகையாளர் மாநாடொன்றில் அறிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு மேலும் பேசுகையில்;

ரோம், வியன்னா விமானத் தாக்குதல் சம்பவத்துக்கெதிராக இஸ்ரவேல் லிபியாவை தாக்க திட்டமிட்டுள்ளது.

இப்படியொரு தாக்குதலை இஸ்ரவேல் மேற்கொள்ளும் பட்சத்தில் மத்திய தரைக் கடற் பிராந்தியத்தில் சமாதானம் என்ற சங்கதிக்கே இடமில்லை என எச்சரித்துவிட்டுதொடர்ந்து பேசினார்.

விமானத் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு அடிப்படையான காரணங்களை லிபியா உணர்கிறது. எனினும் அப்பாவிகள் பாதிக்கப்படுவதையும் உயிரிழப்புகள் ஏற்படுவதையும் லிபியா ஏற்றுக் கொள்ளாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் தமிழருக்கு முதலிடம்

வாஷிங்டன், ஜன. 2

அமெரிக்காவில் நடைபெற்ற ஆங்கில சொல் உச்சரிப்புப் போட்டியில் தமிழரான பாலு நடராஜா முதலிடத்தைத் தட்டிக் கொண்டுள்ளார்.

போட்டி முடிவு அறிவிக்கப்பட்ட மறு நாட்காலை அமெரிக்கப் பத்திரிகைகள் இவருக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

புகழுக்குரிய மாணவராக அவர் பாராட்டப்பட்டார்.

15 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கான போட்டியிலேயே இவர் பங்கெடுத்து வெற்றி கொண்டார்.

90 லட்சம் அமரிக்க மாணவர்கள் இதிற் கலந்து கொண்டனர்.

பதின்மூன்று வயது நிறைந்த பாலு நடராஜா ஒரு இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர். போலிங் புறாக் பகுதியில் இவர்கள் வாழ்கிறார்கள்

## அணுசக்தித் திட்டத்தை நாம் தொடர்வோம்

### பாக். பிரதமர் அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஜன 2

பாகிஸ்தான் தனது அணுசக்தித் திட்டத்தை தொடர்ந்து கடைப்பிடித்து வரும்.

மேற்கண்டவாறு பாகிஸ்தான் பிரதமர் மொஹமத்கான் ஜுனஜோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் இரு சபைகளும் இணைந்த கலப்புக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுதே அவரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர் தொடர்ந்து மேலும் குறிப்பிடுகையில்; பாகிஸ்தானில் நிலக்கரி மற்றும் தேவைகளுக்கான தட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன.

இந்தத் தேவைகளை ஈடு செய்வதற்கு நாம் அணுசக்தியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்றார்.

# வெளி உலகில்

பங்களாதேஷில்

## பகிரங்க அரசியல் நடவடிக்கை அனுமதி

### எதிரான சட்டம் நீக்கப்பட்டது

டாக்கா, ஜன 2

பங்களாதேஷில் பகிரங்க அரசியல் நடவடிக்கைகளுக்கெதிரான சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட நீக்கம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிராளிகள் ஊர்வலங்களை ஏற்பாடு செய்து நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவச் சட்டம் நீக்கப்பட்டு விரைவில் ஜனநாயக அடிப்படையிலான தேர்தல் நடத்தப்பட வேண்டுமென அந்த அணிகளில் ஊர்வலம் போனவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இது இவ்வாறிருக்க. பங்களாதேஷில் அரசு சார்பான புதிய கட்சி ஒன்று உருவாக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது ஐந்து அணிகள் இதில் அங்கம் வகிக்கும்.

பங்களாதேஷின் பொதுப் பணித்துறை அமைச்சர் இந்த கட்சி அமைப்பு முறைகளைக் கவனித்து வருகிறார். பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் எர்ஷாட்டை இதன் தலைவராக இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டு உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## உண்மை நிலைகளை றேகன் திரிப்பு

### ஆப்கானிஸ்தான் கண்டனம்

இஸ்லாமாபாத், ஜன. 2

ஆப்கானிஸ்தானின் உண்மை நிலைவரங்களைத் திரித்துக் கூறி வருகிறார் ஜனாதிபதி றேகன்.

இவ்வாறு காபூல் அதிகார பீடம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ரஷ்ய ராணுவத் தலையீட்டை ஆட்சேபித்து கடந்த வாரம் ஜனாதிபதி றேகன் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தானில் குழப்பகாரர்களின் தலையீட்டுக்கெதிராக ரஷ்யா புரியும் உதவிகளையும் இப்பகுதியில் சோவியத் கொள்கை நிலைப்பாட்டையும் றேகன் தனது அறிக்கையில் முற்று முழுக்க திரித்துக் கூறியுள்ளதாக ஆப்கானிஸ்தான் கண்டித்துள்ளது.

## அணுசக்தி மருந்துகளில் அபிவிருத்தி வேண்டும்

### பாரத விஞ்ஞானிகள் ஆவல்

புதுடில்லி, ஜன 2

அணுசக்தி மருந்துகளை அபிவிருத்தியடையச் செய்வதற்கு ஆதரவு தருமாறு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

பாரதத்தின் முன்னணி அணுசக்தி மருந்து விஞ்ஞானிகளே அரசுக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மத்தியஅரசுக்கும் சிறப்பாக மாநில அரசுகளுக்கும் இந்த வேண்டுகோள் அவர்களால் விடுக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம

### இன்றைய நிகழ்ச்சிகள்

பருத்தித்துறை. ஜன. 3

தூயஅன்னை ஸ்ரீசாரதா தேவியின் 133ஆவது ஜனன தினம் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்று 3ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கொண்டாடப்படும்.

இந்த இரு தினங்களும் பகல் 11மணி தொடக்கம் 12-30மணி வரை அகண்ட நாம பஜனை இடம்பெறும்.

இன்று வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகள், காலை 5-30மணிக்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகின்றன.

பகல் 10மணிக்கு மலர் வெளியீடு இடம்பெறும்.

பகல் 10-05மணிக்கு சேவாச்சிரம வளவில் மரம் நடப்படும்.

பகல் 10-25மணிக்கு யாழ் குடா நாட்டில் ஜீ.சி.ஈ உயர்தரபரீட்சையில் 4 பாடங்களிலும் விசேஷ சித்திபெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன் வை. சிதம்பரநாதனுக்கு ஆயிரம் ரூபா பரிசு வழங்கப்படும்.

பகல் 11 மணிக்கு அகண்ட நாம பஜனை நடைபெறும் பகல்12-30 மணிக்கு விசேஷ பூஜை, பிரசாதம். மாலை 5-20 மணிக்கு தூய அன்னையின் சரித்திரத்திலிருந்து முக்கிய பகுதிகள் வாசிக்கப்படும்.

5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள் பகல் 11மணிக்கு அகண்ட நாம பஜனையுடன் ஆரம்பமாகும்.

பிக்பகல் 4மணிக்கு சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

## இறந்தவர் குடும்பத்துக்கு அரசு உதவும்

கொழும்பு, ஜன. 3

அக்கரைப்பற்றில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட உப தபால் அதிபர் திரு. கே. விநாயகமூர்த்தியின் குடும்பத்துக்கு அரசு முழு உதவிகளும் நிதி உதவியும் வழங்கும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இப்படி அறிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு எதிராக அக்கரைபபற்றில் அண்மையில் நடத்தப்பட்ட ஊர்வலத்தை ஏற்பாடு செய்வதில் திரு. விநாயகமூர்த்தி முன்னணியில் நின்றவர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை திரு.விநாயகமூர்த்தியின் கொலை பற்றி தகவல் தருபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

## சுகவாழ்வுக்கு இயற்கை மருந்து

சாவகச்சேரி, ஜன. 3

சுகவாழ்விற்கு இயற்கை மருந்துகளை நாம் நாடவேண்டும். அவற்றுக்குப் பயன்படும் இலைவகைகளை வீட்டுத் தோட்டங்களில் வைத்து உண்டாக்க வேண்டும். பசளி பொன்னாங்காணி, முசுட்டை, தூதுவளை போன்றவை முக்கியமானவை.

சாவகச்சேரியில் இடம்பெற்ற ஆரம்ப சுகாதார நிலையத் தொண்டர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் பலாலியைச் சேர்ந்த குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் செல்வி. பாலாம்பிகை விநாயகமூர்த்தி இவ்வாறு கூறினார்.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## யாழ் மாநகருக்கு தனியான குழாய் நீர் விநியோகத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன 3

யாழ். மாநகருக்கு என்று தனியான குழாய் நீர் விநியோகத் திட்டம் ஒன்றை அமைக்க மாநகரசபை முடிவு செய்துள்ளது.

அதுபற்றி முழு ஆய்வு ஒன்று விரைவில் மேற்கொள்ளபபட உள்ளது.

தேசிய நீர் விநியோக, வடிகால் சபைப் பொறியியலாளர்கள் இந்த ஆய்வை மேற்கொள்ளுவர்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் புதன்கிழமை (1-1-86) பிற்பகல் நடந்த மாநாட்டில், உத்தேச குழாய் நீர் விநியோகத்திட்டம் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

அப்பொழுது தான் இந்த ஆய்வு நடத்துவது பற்றிய தீர்மானமும் எடுக்கப்பட்டது.

யாழ் மாநகரின் சில பகுதிகளுக்கு கோண்டாவில் நீர்விநியோகத் திட்டத்தில் இருந்து தற்போது குழாய் நீர் விநியோகம் செய்யபபடுகின்றது.

சில பகுதிகளுக்கு யுனிசெப் நீர் விநியோகத் திட்டங்கள் மூலம் நீர் விநியோகஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய உத்தேச குழாய் நீர் விநியோகத்திட்டம், யாழ் மாநகரில் பரந்த அளவில் குழாய் நீர் விநியோகஞ் செய்ய உருவாக்கப்படுகின்றது.

நிலாவரைக் கிணற்றில் இருந்து, குழாய் மூலம் நீர் விநியோகஞ் செய்வது பற்றியும் முன்னர் ஆலோசிக்கப்பட்டது.

### விமான நிலைய கட்டணம் 200 ரூபா

யாழ்ப்பாணம், ஜன. 3

விமானநிலையக் கட்டணமாக 200 ரூபா ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்து அறவிடப்படுகின்றது.

இதுவரை 100 ரூபாவே கட்டணமாக அறவிடப்பட்டது.

நவம்பர் பட்ஜட்டில் இக்கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### டயரி கலண்டரில் படைவீரர் நாட்டம்

மட்டக்களப்பு ஜன. 3

வாகனங்களை வழி மறித்து சோதனை செய்யும் ஆயுதப் படையினர் தற்போது டயறி, கலண்டர் போன்ற அன்பளிப்புப் பொருள்களை பெற்றுக் கொள்வதில் நாட்டம் செலுத்துகின்றனராம்.

படையினர் தனியார் பஸ், லொறி ஆகியவற்றின் சாரதிகளிடம் தான் இந்த அன்பளிப்புப் பொருள்களை கேட்டுப் பெறுகிறார்கள்.

### அகதி முகாமில் குழந்தைமரணம்

நல்லூர், ஜன. 3

திருமலையில் இருந்து அகதியாக வந்து யாழ். தமிழ் மகளிர் அவை முகாமில் தங்கியிருந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்த குழந்தை ஒன்று மரணம் அடைந்தது.

ஒன்றரை வயது நிரம்பிய இப்பெண் குழந்தை சுகவீனமுற்றிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

## பரிசுத்த பாப்பரசரின் இந்திய விஜயம்

### 10 தினங்கள் தங்குவார்

பருத்தித்துறை, ஜன 3

பாப்பரசர் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவரான கன்ரபறியின் பேராயர் கலாநிதி றோபேட் றஞ்சி ஆகியோர் பெப்ரவரி மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்கள்.

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 10 தினங்களும், அங்கிலிக்கன் திருச்சபைத்தலைவர் கலாநிதி றெபேட் றஞ்சி 20 தினங்களும் இந்தியாவில் தங்கியிருந்து பல இடங்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

இரண்டாம் அருள் சின்னப்பர் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்வார். அவர் 10-ஆம் திகதி வரை பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்துவிட்டு ரோமாபுரிக்குத் திரும்புவார்.

[illegible]

வருகை தரும் பாப்பரசர் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி புதுடில்லிக்கும் 5-ஆம் திகதி சென்னைக்கும் (தமிழகம்) 6-ஆம் 7-ஆம் திகதிகளில் கேரளத்துக்கும், 8-ஆம், மங்களூர் கோவாவுக்கும் 9-ஆம, 10-ஆம் திகதிகளில் பூனை, பம்பாய்க்கும் விஜயம் செய்வார்.

5-ஆம் திகதி சென்னைக்கு வருகை தரும் பாப்பரசர் சென்னை கடற்கரை மைதானத்தில் தமிழில் உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர் கலாநிதி றெபட் றஞ்சி பெப்ரவரி 9-ஆம் திகதி பம்பாய்க்கு வந்து சேர்ந்து இந்தியாவில் 20 தினங்கள் தங்கியிருப்பார்.

இச்சந்தர்ப்பத்தில் பெப்ரவரிமாதம் 10-ஆம் திகதி பாப்பரசர் அருள் சின்னப்பரும் பேராயர் றஞ்சியும் சந்தித்து உரையாடுவார்கள்.

## இலட்சியத்தை அடைய "நான்" உதவுகிறது

### சிறப்பு மலர் விழாவில் உரை

நல்லூர், ஜன. 3

சிலர் தங்கள் இலட்சியங்களில் இருந்து தவறி பல வழிகளில் செல்கிறார்கள் அப்படியானவர்களை ஒருவழிப்படுத்தி தமது இலட்சியத்தை அவர்கள் அடையச் செய்வதுதான் இந்த "நான்" சஞ்சிகை.

"நான்" சஞ்சிகையின் 12-ஆவது ஆண்டு சிறப்பு மலர் அறிமுக விழாவில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்திய "தினகரன்" பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் இப்படிக் குறிப்பிட்டார்.

திங்கட்கிழமை நல்லூர் இந்து விடுதியில் விழா நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள், தலைவர் இ சிவகுருநாதன், ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். திரு இ சிவகுருநாதன் மேலும் பேசுகையில்,

ஒரு இளைஞருக்கு 12 வயது மிக முக்கியமான கட்டம் ஆகும். இந்த வேளையில்தான் அவன் பிறந்த நோக்கங்கள் காரணங்கள் அவனுக்கு தெளிவாகின்றன. அதேபோலத்தான் இந்த நான் சஞ்சிகையும் என்றார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் சிறப்புரை நிகழ்த்துகையில்,

இந்த நிகழ்ச்சி ஒரு நல்ல நிகழ்ச்சி. இப்பொழுதுதான் யாழ்ப்பாணத்துத் தமிழன் தமிழனாக வாழத் தலைப்பட்டிருக்கிறான் என்றார்.

செம்பியன் செல்வன் "நான்" சிறப்புமலர் பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்.

சொக்கன் விமர்சன உரை நிகழ்த்தினார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் வெளியீடுகளின் விமர்சனம் செய்தார்.


"நான்" ஆசிரியர் வண. வின்சன்ற் பற்றிக் பதிலுரை நிகழ்த்துகையில்,

மனிதன் மனிதனாக வாழவேண்டும். இதை விடுத்து நாம் மதம் மாற்றத்தைக் கொண்டு வரவில்லை என்றார்.

"நான்" மலரின் முதற் பிரதியை தலைவர் இ. சிவகுருநாதன் ஆணையாளர் திரு. சி.வி.கே. சிவஞானத்திடம் வழங்கினார்.

சிறப்புப் பிரதியை சட்டத்தரணி திரு. க. கேசவன். திரு. எஸ். ஆறுமுகம் பிள்ளை. திரு. பொன். பூலோகசிங்கம், திரு இ. தவகோபால் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# மக்கள் முகம்



## ஓய்வு பெற்றார்

நல்லூர், ஜன. 3

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலையில் பன்னிரண்டு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு. பொ. நடராசா ஓய்வு பெற்றார்.

இவரின் நன் முயற்சியினால் பாடசாலை துரித வளர்ச்சி கண்டதும், படிப்பில் மாணவர்கள் நல் வளர்ச்சி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனமே சர்வமும் "இது சுத்தமானது. இது அசுத்தமானது" என்பதை மனத்தினாலேயே ஒருவன் உணர்கின்றான். பிறரிடத்துக் குற்றம் காணும் ஒருவன், முதன் முதல், தன் மனத்தையே மாசுபடுத்திக் கொள்பவன் ஆகிறான்.

—அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22078
03-01-86 த. பெ. 23

## சிறிமாவோ குடியுரிமை எதற்குப் பயன்படும்?

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை வழங்கப்பட்டுவிட்டது. இது இலங்கை அரசியலில் ஒரு முக்கிய நிகழ்ச்சி. பிரதான திருப்பம் எனறும் சொல்லலாம்.

சர்வ வல்லமையும் படைத்த, சர்வ அதிகாரங்களையும் கொண்ட ,அதி உத்தம ஜனதிபதி ஒரு காலத்தில் அகங்காரமாகப் பேசியது ஞாபகத்திற்கு வருகிறது. 1982-ஆம் ஆண்டில் சர்வஜன வாக்கெடுப்புப் பிரசாரக் கூட்டங்களில் பேசுகையில் அவர் பின்வரும் சாரப்படக் கூறியிருந்தார்:

நான் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி. என்னுல் எதையும் செய்ய முடியும். ஒன்றை மட்டும் தான் செய்ய முடியாது. அதாவது ஆணைப் பெண்ணுகவும் பெண்ணை ஆணுகவும் மாற்றுவது தான் எனக்கு இயலாத காரியம்.

1982இல் இருந்த அந்த ஆணவர், அதிகாரத் திமிர் இன்று தளர்ந்து போயிற்று. திருமதி பண்டாரநாயக்காவுக்கு சட்டப்படி மீண்டும் குடியுரிமை கிடைக்க இன்னமும் பத்தே பத்து மாதங்கள்தான் உள்ளன. திடீரென அவர்மீது ஜனதிபதிக்கு இரக்கம் ஏற்பட்டுத்தான் குடியுரிமை வழங்கினர் என்று சொள்ளமுடியவில்லை.

"குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்து நண்ணிலும் நண்ணுவர்" என்பது தமிழ்ப் பாடல். இந்தப் பாடலின் பொருள் உணர்ந்து தான் நாட்டின் பெருந்தலைவரானவர் திருமதி பண்டாரநாயக்காவுக்குப் பகிரங்க மன்னிப்பு வழங்கினரா?

காரியம் நடந்துவிட்டது. காரணம் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை இந்தக் காரியத்தின் விளைவாக இனி நடக்கப்போவது எது என்பதே உடனடியாக எழும் கேள்வி.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்பட்ட உடனேயே தென்பகுதி அரசியல்வாதிகள் பொதுத்தேர்தலைக் கற்பனை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

அரசியல்வாதிகள், அவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அதிகாரம், பதவி குறித்துத் தான் அவர்களுக்குக் கவலை. நாட்டைப் பற்றி நினைப்பது மிக மிகக் குறைவு.

இந்த நாட்டின் இன்றைய முக்கிய பிரச்சினை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம். அவர்கள் நித்தம் நித்தம் மடிந்து ஒழிந்து போகும் மிகவும் ஆபத்தான பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே இன்றைய பிரதான அரசியற் கடமை.

திருமதி பண்டாரநாயக்காவுக்குக் குடியுரிமை வழங்கப்பட்ட திருப்பத்தைப் பயன்படுத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

பதவியில் உள்ள அரசாங்கங்கள் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயன்ற போதெல்லாம் எதிரணியில் உள்ளவர்கள் அதனைக் குழப்பி விடுவது இந்த நாட்டின் அரசியல் வரலாறு.

அது இப்போதாவது நிறுத்தப்பட வேண்டும். பூதாகாரமாகி விட்ட தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அரசும் எதிரணியும் கை கோர்த்துச் செயற்படுவது அவசியம்.

பிரச்சினையின் உண்மை வடிவத்தை தென்னிலங்கை மக்களுக்கும் புரிய வைக்க வேண்டும். தமிழர்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் பூரண சுதந்திரத்தோடு வாழ்வதற்கு இடம் தர வேண்டும் என்பதை அவர்களுக்கு விளங்க வைக்க வேண்டும்.

இவ் விஷயத்தில் இந்தியாவின் நல்லெண்ண மத்தியஸ்தத்தை தக்கபடி பயன்படுத்தி நாட்டு நலனைக் காப்பது தென்னிலங்கை அரசியல்வாதிகளின் முக்கிய பொறுப்பு.

காலங்கடந்தால் தமிழர்களுக்கு மட்டுமன்றி சிங்களவர்களுக்கும கஷ்டங்கள் ஏற்படும் என்பதை இப்போதாவது உணர்ந்தால் நல்லதல்லவா?

# தாய்மைக்கு உறைவிடம் அன்னை சாரதாதேவி

## இன்று அவரது ஜெயந்தி தினம்

காலத்துக்குக் காலம் உலகில் தர்மம் மறைந்து அதர்மம் ஓங்கும் போது மக்களுக்கு வழிகாட்ட அவதார புருடர்கள் தோன்றுவார்கள் என்பிப்து வரலாறு கண்ட உண்மை. அதை மெய்ப்பிப் பதுபோல அன்னை பாரத மாதா மகளிர் திலகங்களின் தனிப் பண்புகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து முழு நிலை பெற்ற தெய்வமாக திருவவதாரஞ் செய்தார்.

சக்தி சொரூபமாய்த் தோன்றி, தாய்மையின் பீடமாய் அமர்ந்து, சரணடைந்தவர்களது துன்பம் துடைத்துக் காத்துத் தன் வாழ் நாள் முழுவதும் ஆனமீகப்பணி ஆற்றினர்.

தமது ஆன்மீகப்பணியின் காரணமாக ஒரு தெய்வமாக மதித்து உயர்த்தப்பட்டதென்ருல் இவரின் வாழ்வு எத்தனை சிறந்ததாக உயர்ந்திருக்க வேண்டும்?

நாம் அன்னையின் வாழ்க்கை வரலாற்றினைப் படிக்கும்போது மன உறுதியடைகிறோம். அன்னையார் சிறு பராயத்தில் இருந்தே துன்பப்பட்டுள்ளார் என்றே தோன்றுகின்றது. என்றுலும் துன்பத்திலும் இன்பம் கண்டவர் என்ற பெருமைக் குரியவராகத் திகழ்ந்தார்.

ஆறு வயதினிலே, அறியாப் பருவத்திலே இருபத்தி மூன்று வயதுடைய பரமஹம்சரை கணவராகப் பெறும் பேற்றினைப் பெற்றுலும் வெகு காலத்திற்குப் பின்னரே அவருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக்கிட்டியது. கணவன் மனைவியாக பந்தத்தினுல் பிணைக்கப்பட்ட இந்தத் தம்பதியருக்கு இடையே இருந்த தொடர்பு ஆத்மீகத் தொடர்பாக இருந்ததே தவிர இல்லறத்திற்குரிய இணைப்பாக அமையவில்லை.

எல்லோரும் சமம்: எல்லா மதங்களும் சமம்; சாதி இல்லை என்ற கோட்பாட்டை நெறியாகக் கொண்டவர்.

இப்படியாக ஒரு அன்னை பணிபுரிய முடியுமாயின் அவர் தெய்வமாக இல்லமல் வேறு யாராக இருக்க முடியும்? ஸ்ரீ இராம அவதாரத்தில் சீதையாகவும், ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்தில் ருக்குமணியாகவும் அவதரித்த திருமகளே ஸ்ரீ ராம கிருஷ்ண அவதாரத்தில் சாரதையாக

- செல்வி. ஜெ. முத்துக்குமாரு -

அவதரித்தார் என்பது நிச்சயம்.

ஸ்ரீ சாரதாதேவி குழந்தைப் பருவத்திலேயே மற்றச் சிறுமியர்க்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தார். விளையாடும் பொம்மைகளைத் தெய்வமாக வழிபடுவார். சிறுமியர்களிடையே சச்சரவு ஏற்பட்டால் சமாதானப் படுத்துவார்.

ஒருவரை ஒருவர் தெய்வமாகக் கருதிய அபூர்வத்தையே இவர்களிடம் தான் காண முடிகிறது. வாழ்வின் இறுதிமட்டும் கணவனை கண் கண்ட தெய்வம் எனக் கருதித் தொண்டு செய்வதையே பெரும் பணியாகக் கொண்டிருந்தார் அன்னையார்.

அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் பெரிய படித்த மேதாவியுமல்ல; பணம் படைத்தவருமல்ல; சமயவாதியும் அல்ல: ஆனுல் அவர் சீடர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் உள்ளவராகவும் ஆத்மீக வளர்ச்சிக்கு உதவும் குருவாகவும் விளங்கினுர்.

பெண்மையின் சிறப்பியல்புகளான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன சிறுபராயத்திலேயே இவரிடம் காணப்பட்டன. நாற் குணங்களின் பிரதிபலிப்பான முக்காடிடும் பழக்கத்தை இவர் அன்னையாகிய போதும் கைவிடவில்லை.

பரமஹம்சருக்குப் பணிவிடை செய்யும் போதும் தன் முக்காட்டைப் பேணி வந்தார்.

ஞானக்கதிர்

பரமஹம்சரே சாரதா தேவியாரின் தெய்வீகத் தன்மையில் பரவசமடைந்து விடுவார். அன்னை பராசக்தியின் மறுவடிவமாக எண்ணி தூய அன்னை சாரதா தேவியாரை வழிபடுவார். சாரதா தேவியாரின் வாழ்க்கையின் முடிவான இலட்சியம் இன்னதென்று தெரிந்து அந்த இலட்சியத்தை இளம் பராயத்திலேயே கடைப்பிடிக்கத் தொடங்கினுரென்ருல்; அவரது தெய்வீகத் தன்மையின் நிலை தான் என்னே!


ஏட்டுக் கல்வியைப் பெருத ஸ்ரீ சாரதா தேவியார் உயர்ந்த ஞான வாழ்வு பெற்று, உயரிய உபதேசங்களைச் செய்வதற்கு அவருடைய தெய்வீகத் தன்மையே காரணமாகும்.

கல்யாணமாகிக் கணவனுடன் வாழ வந்த அன்னையின் கற்பின் குண நலன்களையும், பரிபக்குவத்தையும் உணர்ந்தே, அவரைத் தாயே என்று பரமஹம்சர் அழைத்தாரெனினும், அன்னையை முழுமையாகச் சோதிக்க விரும்பி "யான் பற்றுக்கள் யாவற்றையும் துறந்து, பரலோக மாதா போலவே பெண்களைப் போற்றும் இயல்பு கொண்டவனுக இருக்கிறேன். ஆயினும் உம்மை மணந்ததினுல் சம்சார சாகரத்திற் பந்திக்கப் பட்டவனுயுள்ளேன். எனவே உம் மனத்தில் யாதாயினும் இச்சைகள் உண்டெனில் ஒளியாது கூறுக" என்று கூறினுர்.

இதற்கு அன்னையார் "ஸ்வாமி! தங்களுடன் இல்லற வாழ்வினில் இரண்டறக் கலக்க யான் இங்கு வந்த பொழுதிலும், லௌகிக வாழ்வில் மட்டும் பங்கேற்றுத் திருப்தி அடையும் பொருட்டு இங்கு வரவில்லை, தங்களது அருட் கடலிற் கலந்து, தங்களது துறவறத்திலும், பற்றற்ற வாழ்விலும் பங்கேற்கும் பொருட்டே இங்கு வந்துள்ளேன்" என்று பகர்ந்தார். இவ்விதம் கூறிய மையினுலேயே அன்னையார் தன்னையும் காத்துத், தற் கொண்டவனையும் காப்பாராயினர்.

தூய அன்னை வாழ்ந்த வாழ்க்கை முறை இன்றும் நம்மிடையில் உண்டு. அன்னை பெண்மைக்கும் தாய்மைக்கும் உறைவிடம்: ஒப்புயர் வில்லாச்சிகரம் பெண்மையின் புனிதத்தை விளக்க ஸ்ரீ இராம கிருஷ்ணர் நமக்களித்த செல்வம் தான் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் என்று சகோதரி நிவேதிதை பகர்ந்துள்ளார்.

அன்னையின் வாழ்வினைப் பின்பற்றி அன்பினையும் பண்பினையும் தெய்வீகத்தையும் நிலை நாட்டுவோமாக!



### பொய்யாமொழி

குறள்:
வீழ்நாள் படாஅமை நன்ருற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

பொருள்:
ஒருவன் அறம் செய்யத் தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தைச் செய்வானுனுல், அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.

சேலம் மாநாட்டில் அன்பழகன்

## ஈழத்து இளைஞரை பார்த்ததும் ஏற்படும் உணர்வு, தமிழகத்து இளைஞர்பாலும் வர வேண்டும்

சேலம், ஜன. 2

ஈழத்து இளைஞர்களைப் பார்க்குப்போது சங்க காலத்து வீரர்களைப் பார்க்கும் உணர்வு ஏற்படுகின்றது.

தியாகம் செய்யும் மனப்பான்மை உடைய ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நூற்றுக்கணக்கான சகோதரிகள் அங்கு வீர உணர்வோடு போராடுகின்ருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அனபழகன் மேற்கண்டவாறு பேசினுர்.

உலகத் தமிழர் பண்பாட்டு மாநாடு சேலம் தமிழ்ச் சங்கத்தில் நடந்தது.

மாநாட்டில் கலந்து கொண்டு பேராசிரியர் அன்பழகன் பேசினுர்.

அவர் சொன்னதாவது:

தமிழனுக்கு என்று ஒரு பண்பாடு இருப்பதாக என்னுல் கருத முடியவில்லை.

நிலை பெயர்ந்து தெளிவற்று குழப்பவாதியாக தமிழன் இருக்கின்ருன்.

இங்கு பேசிய இலங்கைத் தமிழ்ப்பெண் மகேஸ்வரி கேட்டாரே ஒரு கேள்வி.

"6 கோடி தமிழர்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நினைத்தால் முடியாத காரியமா'? என்று அப் பெண் கேட்டார்.

தமிழ் இனத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கும் போது இது தமிழனுக்கு உரிய மண் என்ற உணர்வு சோழர் காலத்தில் இருந்தே நம்மிடம் இல்லை.

ஒரு நாட்டுக்குரிய மக்கள் என்ற உணர்வோடு தமிழன் வளராமல் போய்விட்டான்.

எனவே இலங்கையில் எந்தக் கொடுமை நடந்தாலும் இங்கே உள்ள தமிழன் அதை உணர மாட்டான்.

இன்று தமிழன் என்று சொல்லவே விரும்பாத அள்வுக்கு தமிழன் வாழ்ந்து கொண்டு இருக்கிருன்.

தமிழனுல் தமிழ் வளரவில்லை பாதிரிமார்களினுல் தான் தமிழ் வளர்ந்தது தமிழனுக்கு இன உணர்வு வேண்டும். இளைஞர்களுக்கு அந்த உணர்வை வளர்க்க வேண்டும்.

ஈழத்துத் தமிழ் இளைஞர்களைப் பார்க்கும் போது சங்க காலத்து வீரர்களைப் பார்க்கும் உணர்வு ஏற்படுகின்றது.

தமிழக இளைஞர்களைப் பார்க்கும் போதும் அந்த உணர்வு ஏற்பட வேண்டும்.

தமிழ் நாட்டிலே தமிழனைப் பார்ப்பதற்காக அந்த உணர்வை வளர்க்க வேண்டி உள்ளது.

வெளிநாட்டில் இருந்து வரும் தமிழர்கள் இதுதான் தாய்த் தமிழ்நாடா என்று எண்ணும் அளவுக்கு ஆற்றல் அற்ற கூட்டமாக தமிழகத் தமிழர்கள் உள்ளனர். இந்த நிலையில் [illegible] கொண்டு எப்படி ஈழத்து [illegible] கெட்க முடியும்?

ஈழத்தில் செல்வா போன்ற பெரிய தலைவர்கள் இருந்திருந்தால் ஒன்றுபட்டு செயல்பட்டிருக்க முடியும்.

இருந்தாலும் ஈழத்தில் தமிழ் இளைஞர்கள், சகோதரிகள் வீர உணர்வோடு போராடுகின்ருர்கள்.

இங்கே உள்ள தமிழர்களும் அந்த அளவு உணர்வு பெற வேண்டும்.

இலங்கையின் நிலை தமிழ் நாட்டிலும் ஏற்படாது என்று எப்படிக் கூற முடியும்? 50 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தித் திணிப்பு வராது என்று நம்புகின்றீர்களா?

நாம் முடிந்த அளவு தமிழ் மக்களைத் தயார் படுத்த வேண்டும்.

களத்துக்குப் போகாவிட்டாலும் விடுதலைப் போராளிகளை ஆதரிக்கவாவது செய்ய வேண்டும்.

எனது இயக்கத்துக்கு தற்போது சக்தி இல்லை. அந்த சக்தி மட்டும் இருந்திருந்தால் இந்திய அரசுக்கு எச்சரிக்கை விட முடிந்திருக்கும்— இப்படிப் பேராசிரியர் அன்பழகன் சொன்னுர்.

இம்மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளாக திரு. இ. சற்குருநாதன், திரு. க. சண்முகலிங்கம், பண்பாட்டு இலங்கைக் கிளையின் [illegible] ஜெ. ந்துராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பண்டாரிக்கு ஓய்வு

## கொடுத்து பார்த்தசாரதியிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப் படுவது குறித்து திரு. பண்டாரி ஆடசேபனை தெரிவிக்க முன்வராதது குறிப்பாக ஈழம் தேசிய விடுதலை முன்னணிக்கு சஞ்சலத்தைக் கொடுத்தது.

பண்டாரி – சத்தியேந்திரா சொற்போரில் ஏனைய தமிழ்ப்பிரதிநிதிகளும் இறங்கும் நிலையை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச்சேர்ந்த திரு. இரா. வாசுதேவாவும் தவிர்த்து விட்டனர்.

தமிழர் அமைப்புக்களின் சார்பில் திரு. பண்டாரியிடம் மன்னிப்புக் கேட்டு நிலைமையைச் சமாளிப்'தில் திரு. அ. அமிர்தலிங்கமும் திரு. வாசுதேவாவும் ஈடுபட்டனர்.

திரு. சத்தியேந்திரா கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கைத்தொழிற் சட்டங்களின் சாரத் தொகுப்பு ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார். இது நான்கு ஆண்டு காலப் பணி.

பிரபல மனித உரிமைச் சட்ட நிபுணரான திரு. எஸ். நடேசனின் (கியூ.சி) மகன்.

ஜெயவர்த்தன அரசில் தொழில் அமைச்சுச் செயலாளராகப் பணி புரிந்தவர்.

பின்னர் அதில் இருந்து விலகி, போராளிகளான குட்டிமணி,தங்கத்துரை, ஜெகன் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடியவர்.

திரு. சத்தியேந்திராவின் இந்தப் பின்னணியைத் திரு. பண்டாரி தெரிந்து இருக்க முடியாது. அது இயலாத காரியம்தான்.

பின்னணி தெரிந்து இருந்தால் திரு. பண்டாரி அப்படிப் பேசி இருக்க மாட்டார்.

திம்பு முதலாவது மாநாட்டுக்கு முன்னர் பிரதமரைச் சந்திப்பதற்காக போராளிகள் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டனர்.

அங்கு வைத்து இந்தியப் புலனாய்வு அதிகாரிகளால் போராளிகள் தீவிர விசாரணைக்குள்ளாகினர்.

இதனால் ஆத்திரம் அடைந்த பிரபாகரன் ஒரு கட்டத்தில், "பேச்சுக்களில் எனக்கு அக்கறை இல்லை. நான் யாழ்ப்பாணம் போய் அங்கிருந்து கொண்டு போராட்டம் நடத்துவேன்" – என்று கத்தினுர்.

இக்கட்டத்தில்தான் இந்திய ரகசிய புலனாய்வுப் பகுதியினர் மென்

மையான முறையில் போராளிகள் இருப்பது இந்திய மண்ணில் என்பதை நினைவூட்டினுர்கள்.

ஈழம் விடுதலை நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஆறுமாதங்கள் போதுமானது என்றும் புலனுய்வுப் பகுதியினரால் கூறப்பட்டது.

"எங்கள் பார்வையில் இருந்து எப்படிப் போக முடியும்" - என்று பிரபாகரனிடம் கேட்கப்பட்டது.

திரு. பாலசிங்கம் நாடு கடத்தப்பட்ட பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் திரு. பிரபாகரன் தலைமறைவானது, இந்திய அரசுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

நாடு சிஐடிக்களாலேயே பிரபாகரனைக் கண்டு பிடிக்க முடியாது போய் விட்டது.

ஆனுல் பிரபாகரன் எப்படியோ எல்லாப் புலனுய்வுப் பிரிவுகளுக்கும் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுத் தலைமறைவானுர்.

இக்கட்டத்தில் தான் மத்திய அரசு, பிரபாகரனைக் கண்டுபிடிக்க தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை நாடியது.

அதன் பின்னர்தான், சென்னையில் தமிழ் ஈழப் போராளிகளும் மிதவாதத் தமிழ்தலைவர்களும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கத் தொடங்கினர்.

> இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி, மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறப் போகின்ருர்,
>
> இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் சிறப்புப் பிரதிநிதியாகப் பணியாற்றுபவர் திரு. பண்டாரி.
>
> திரு. பண்டாரியின் அணுகுமுறை போராளிகளுக்கும் மிதவாதத் தலைவர்களுக்கும் பிடிக்கவில்லை.
>
> "பண்டாரிக்கு ஓய்வு; பார்த்தசாரதி மீண்டும் வேண்டும்" இதுதான் தமிழர் அமைப்புக்கள் இந்திய மத்திய அரசுக்கு விடுத்த வேண்டுகோள்.
>
> இந்தியாவில் இருந்து வெளிவரும் 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் முதல் பகுதி நேற்றுப் பிரசுரமாகியது. இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

யாழ்ப்பாணம், திருமலை, இராமேஸ்வரம் பகுதிகளில் பிரபாகரன் நடமாடியதாகக் கூறப்பட்டது.

பிரபாகரன் இல்லாத ஈழம் தேசிய விடுதலை முன்னணி, வெறும் காகிதம் என்பது தெரிந்தது.

முன்னணியில் உள்ள ஏனைய உறுப்புக்கள் எடுக்கும் முடிவுகள் கூட, பிரபாகரன் இல்லாத நிலையில் பெறுமதியாக இருக்காது என்று கருதப்பட்டது.

இந்திய புலனுய்வுப் பிரிவு (RAW), தமிழ்

திரு. ரொமேஷ் பண்டாரிக்கு ஓய்வு கொடுத்து விட்டு திரு. ஜி. பார்த்தசாரதியிடம் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

இதுவே அந்த வேண்டுகோள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையின் சகல அம்சங்களையும் நன்ருக அறிந்து 'விரல் நுனி'யில் வைத்து இருப்பவர் அல்லவா, திரு. ஜி. பார்த்தசாரதி

(முற்றும்)

## மல்லாகம் பிரஜைகள் குழு பராமரிக்கும் அகதி முகாம்

காங்கேசன்துறை, ஜன. 2

வலி – வடக்குப் பகுதிக்கு வந்துள்ள திருமலை அகதிகளுக்கென மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அகதிகள் முகாமை மல்லாகம் பிரஜைகள் குழுவினர் பராமரித்து வருகின்றனர்.

திருமலை வன்செயலை அடுத்து முதலில் சில குடும்பங்கள் வலி வடக்குப் பகுதிக்கு வந்திருந்தன.

தற்போது தொடர்ந்தும் அங்கிருந்து குடும்பங்கள் அகதிகளாகி இங்கு வந்து சேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கென மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் அகதி முகாம் ஏற்படுத்தப்பட்டு உணவு, உடை போன்றவை வழங்கப்படுகின்றன.

## அகதிகளுக்கு திருச்சபை உதவி

யாழ்ப்பாணம், ஜன. 3

பருத்தித்துறை, தம்பசெட்டியில் உள்ள திருகோணமலை அகதிகளுக்கு தென்இந்தியத் திருச்சபை யாழ்ஆதீனம் உணவுப்பொருள்களை அண்மையில் வழங்கியது.

அகதிகள் முகாமில் வைத்துபால்மா, துணிப் பொருள்களை தென்இந்தியத் திருச்சபையின் யாழ். ஆயர் அம்பலவாணர் அகதிகளுக்கு வழங்கினர்.

ஆயர் அம்பலவாணரைப் பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச் சபைத்தலைவர் திரு. ந. குணசீலன், செயலாளர் திரு நா. சிவசுப்பிரமணியம், பொருளாளர் திரு. சி. தயாநிதி பருத்தித்துறைப் பிரஜைகள் குழு உபதலைவர் திரு. ஆ. தேவராசன் ஆகியோர் வரவேற்றனர்.

அருள்திரு. ஜெயகுமாரரும் ஆயருடன் வந்து இருந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிற்மன் கட்டச்சு சுருக்கெழுத்து
90 மணிநேர துரித பயிற்சி
BOOK - KEEPING
SPOKEN ENGLISH
தொடர்புகள்: நிர்வாகி சங்கர்
J. E. C.
(சாந்தி சினிமா முன்)
யாழ்ப்பாணம்.
கிளை: பிறிலியன் அக்கடமி
பருத்தித்துறை—நெல்லியடி.

# உதயன்

03-01-1986

86, பங்குனி முதற்கிழமை
நடைபெற உள்ள
பிற்மன் லண்டன் பரீட்சைகள்
90மணி நேர - தட்டச்சு, சுருக்கெழுத்து
BOOK - KEEPING வகுப்புக்கள்
யாழ்நகரில் எமது நிறுவன J. E. C மேல் மாடியில் பரீட்சை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்)

## வித்தாரம்

என்ன முரளி! விழுந்தடிச்சுக்கொண்டு ஓடிவாறாய் ஏது காரணம்?

அடடே நான் மறந்து போனேன். நேற்றைக்குச் சொல்லிக்கொண்டிருந்த விஷயத்தைக் கொஞ்சம் சஸ்பென்ஸிலை விட்டிட்டுப் போயிட்டேனே.

இந்தக்காலத்துப் பிள்ளையளுக்கு சஸ்பென்ஸ், மர்மம், திகில் எண்டால் காணும். உடனை அதுகளைத்தான் வாங்கிப் படிக்குதுகள். படிக்க வேண்டிய சரித்திரம், பொது அறிவு, இலக்கியம் எண்டு எதையும் படிக்காதுகள்.

ஓகோ, நேற்று சிறிமா அம்மையாருக்குக் குடியுரிமை குடுத்த விஷயம் எல்லே பேசினனாங்கள்.

சிறிமாவுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் எண்டு திடீர்யோசனை இந்த நாட்டு ஜனாதிபதிக்கு எப்பிடி வந்தது என்பதுதான் இப்ப பல ஆக்கள் செய்யிற ஆராய்ச்சியாக் கிடக்கு

தெரியாதே ஒரு காரியம் நடந்தா அதுக்கு ஒன்பது காரணம் சொல்லுவினம். அதிலை ஒண்டுதான் சரிவரும். மற்றது எல்லாம் பிழைச்சுப் போறதுதான்.

அதுபோலை சிறிமாவுக்குக் குடியுரிமை கிடைச்சது குறித்துப் பலதும் பத்தும் பேசினம். எது உண்மையான காரணம் எண்டது இப்போதைக்குச் சரியாத் தெரிய வராது. கொஞ்சநாள் போக எல்லாம் தானாயே அம்பலமாகிவிடும்.

ஆனா சிறிமாவோ சொன்னமாதிரி அக்கரைகளிலை இருந்து வந்த நெருக்குதலாலை தான்குடியுரிமை குடுக்கப்பட்டதாகப் பலமாகச் சொல்லப்படுகுது.

அதுவும் குறிப்பாக பக்கத்திலை இருக்கிறநாடு குடுத்த சில மறைமுகமான நெருக்குதல்களாலை தான் காரியம் நடந்ததாக ஒரு கதை!

யார் குத்தியோ அரிசியாகிவிட்டது. குடியுரிமை கிடைச்சபிறகு சிறிமா இப்ப சரியாய்த்தான் பேசிறா. தான் மன்னிப்புக் கேட்கவில்லை எண்டும், குற்றம் செய்யவில்லை எண்டும் அரசாங்கம்தான் தன்ரை குடியுரிமையைப் பறிச்சது, மக்கள் இல்லை எண்டும் சொல்லுறா. அதுமட்டுமில்லை, பொதுத்தேர்தல் வைக்க வேணுமெண்டும் ஒற்றைக் காலிலை நிக்கிறா மக்கள் தன்ரை குடியுரிமையைப் பறிக்கயில்லை எண்டு சொல்லுறவ, தான் "சிட்" எம்.பி.யாக வர மாட்டா எண்டும் சொல்லுறா.

அரசியல்வாதிகளே உப்பிடித்தானே. தங்களுக்கு எந்தப் பதவியிலையும் கொஞ்சம்கூட நாட்டம், விருப்பம் இல்லாத மாதிரித்தான் நடிச்சுக் கொள்ளுவினம். ஆனா அது எப்ப கைக்குக் கிடைக்கும் எண்டு மனதுக்குள்ளை ஆசைப்பட்டுக் கொண்டு இருப்பினம்.

"சிட்" எம்.பி. பதவி தனக்குத் தேவையில்லை எண்டு சொல்லுற அம்மா கொஞ்ச நாளையிலை கோட்டேயிலை ஜே. ஆர். கட்டின பார்லிமெண்டுக்குப் போகாட்டாப் பார்.

கோண்டாவி

## திட்டமிடல் உதவிபணிப்பாளர்

யாழ்ப்பாணம் ஜன,2

மன்னார் திட்டமிடல் அதிகாரி திரு தி. இராஜநாயகம், திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இவர் பல ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றார்.

★ இ. தொ. கா. பிரார்த்தனைத் திட்டம்

# சம்பளம் வெட்டினால் வேலை நிறுத்தம்

## செல்லச்சாமி எச்சரிக்கிறார்

கொழும்பு, ஜன. 3

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் திட்டப்படி தியானம், பிரார்த்தனைகளில் ஈடுபடும் தோட்டத் தொழிலாளருக்கு சம்பளத்தை வெட்டினால் அது வேலை நிறுத்தப்போராட்டத்தை உருவாக்கும்.

இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கிறார் இ. தொ. கா. செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி.

இ.தொ. காவின் தியானம், பிரார்த்தனைத் திட்டம் பற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் அரசின் உயர்மட்ட அதிகாரிகள் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ரஞ்சன் விஜேரத்தின, மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. டெம்ஸிற் செனிவிரத்ன ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தியானம், பிரார்த்தனைத் திட்டத்தில் ஈடுபட்டு வேலைக்குப் பிந்தி வரும் தொழிலாளர்கள் பிற்பகல் ஒரு மணிக்கு முதல் வரும் பட்சத்தில் அவர்களது அரைநாள் சம்பளத்தை வெட்டி மிகுதி அரைநாளுக்கு சம்பளம் வழங்குவது என்றும்–

ஒரு மணிக்குப் பிந்தி வருபவர்களுக்கு முழுச் சம்பள வெட்டு என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அரசின் இந்த முடிவு குறித்து இ. தொ. கா. செயலாளர் திரு செல்லச்சாமி கருத்து வெளியிடுகையில் அரசின் இத்தகைய கெடுபிடிகள் வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு வழி வகுக்கும் என்றார்.

எமது திட்டம் தோட்டத்துறையில் இவ்வளவு சிக்கலை ஏற்படுத்தும் என்று அரசு கருதியிருந்தால் சம்பள வெட்டைப் பற்றித் தீர்மானிப்பதற்கு பதிலாக எமது திட்டத்தை கைவிடும்படி எம்மைக் கேட்டிருக்கலாமே? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# யாழ். மாவட்டத்தில் வெங்காயம் கிழங்கு நெல் உற்பத்தி வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 3

கடந்த ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, வெங்காயம், நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

1985–86 ஆம் ஆண்டுக்கான யாழ் மாவட்ட விவசாய செயற்படு திட்டத்துக்கு அளித்துள்ள அணிந்துரையில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

அசாதாரண காலநிலை மற்றும் விதைகள் பசளை, களைகொல்லி பற்றாக்குறை சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை, பதற்ற நிலைமை ஆகியவை காரணமாகவே விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டது.

1984 ஆம் ஆண்டில் பெருமழை காரணமாக வெங்காயம், உருளைக் கிழங்குச் செய்கைகள் முற்றாகப் பாதிப்பு அடைந்தன இந்தியாவில் இருந்து வெங்காய விதைகளை இறக்குமதி செய்ய எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை

1984–85 ஆம் ஆண்டுகளில் உருளைக்கிழங்குச் செய்கையும் பெருமளவில் பாதிப்பு அடைந்தது.

போக்குவரத்துப் பிரச்சினை இதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இவ்வாறு இவ்வறிக்கையின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

சிறிமாவோவுக்கு குடியுரிமை

# மிக சந்தோஷமான மனிதன் நாமே என்கிறார் ரொனி

கொழும்பு ஜன.3

இன்று உலகிலேயே மிகவும் சந்தோஷமான மனிதன் நானே.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் சொன்னார்.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டது பற்றிக் கேட்ட போதே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எனது பழைய அரசியல் தலைவி திருமதி பண்டாரநாயக்கா அவருக்கு மீண்டும் குடியுரிமை கிடைத்ததில் என்னைவிட யாருக்கு மகிழ்ச்சி அதிகமாக இருக்கும்—இப்படி திரு ரொனி டி மெல் கேட்டார்.

சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் ஆகியோர் கருத்து வெளியிடுகையில், "எப்பொழுதோ செய்ய வேண்டியதை இப்பொழுது தான் அரசு செய்துள்ளது — என்று குறிப்பிட்டனர்.

## துப்பாக்கச்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் படையினர் நடந்து கொள்வதாக சர்வதேச இயக்கங்களும் வெளிநாட்டு அரசாங்கங்களும் குறைபடுவதைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்தப் புதிய உத்தரவுகளைப் பிறப்பித்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் தந்தன.

## வந்தாறுமூலை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட 4 கட்டடங்கள்.

18ம் திகதி உன்னிச்சையில் நீர்ப்பாசன இலாகாவிற்குரிய அலுவலகம், சுற்றுலா விடுதி உட்பட 4 கட்டடங்கள்.

ஆகியவையே மேற்படி கட்டடங்கள் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## லொறியில் வந்து....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெண் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் இப்போது யாழ். வைத்தியசாலை 9ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஞானேஸ்வரி சம்பவம் பற்றி மேலும் தெரிவித்ததாவது:–

டிசம்பர் 31ஆம் திகதி பிற்பகல் 6 மணியளவில் நான் சினேகிதிகளுடன் வீட்டினுள் கதைத்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது எனது வீட்டின் முன்னால் லொறி ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து 25க்கும் மேற்பட்ட சீருடையினர் இறங்கினர். எனது வீட்டை அவர்கள் சுற்றி வளைத்தனர்.

வேறு சிலர் நான்கு பக்கத்திலும் தொடர்ந்து சுட்டனர்.

இதனால் எனது தோள் மூட்டுக்கும் முழங்கைக்கும் இடையில் காயம் ஏற்பட்டது.

எனது வீட்டில் இருந்த சினேகிதிகள் ஓடிப்போய் அடுத்த வீட்டுக் குசினிக்குள் புகுந்து கொண்டனர்.

வீட்டுக்கு வெளியே நின்ற சீருடையினர் "வீட்டிற்குள் இருப்பவர்கள் வெளியேறுங்கள். இல்லையேல் வீட்டுடன் கொளுத்துவோம், சுடுவோம்" என்றனர்,

இதனால் பயத்துடன் எல்லோரும் வீட்டிற்கு வெளியே வந்தோம்.

வந்த எம்மை நிலத்தில் இருக்கும்படி பணித்தனர்.

வெள்ளைச் சேர்ட்டுடன் ஒருவன் ஓடிவந்தான். எங்கே? என்று கேட்டனர்.

பின்னர் சீருடையினர் எல்லோரும் அடுத்த வீட்டிற்குப் போனார்கள். அங்கு ஒருவரும் இருக்கவில்லை அந்த வீடு எரிக்கப்பட்டது.

வீடு எரிந்ததும் சீருடையினர் அவ்விடத்தை விட்டுப்போய்விட்டனர்.

இப்படி அவர் தெரிவித்தார்.

# வவுனியா திருமலைக்கு லலித் விஜயம்

திருகோணமலை,ஜன.3

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி (வியாழக்கிழமை) நேற்று திருகோணமலைக்கும் வவுனியாவுக்கும் விஜயஞ்செய்தார்.

திருமலை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் அமுல் நடத்தப்பட்டுவரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அமைச்சர் பார்வையிட்டார்.

சேருவல, நிலாவெளி, தெஹிவத்தை, மூதூர்ப் பகுதிகளுக்கு அமைச்சர் சென்று பார்வையிட்டார்.

திருமலை மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஹாஷா குணரட்ன, அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணண்டோ ஆகியோரும் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

தெஹிவத்த கிராமத்தில்சிங்கள அகதிகளுக்கு உதவிசெய்ய சர்வதேச நிறுவனம் ஒன்றும் முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் சொன்னார்.

வவுனியாவுக்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுமாலை விஜயஞ் செய்தார்.

வவுனியாவில் உள்ள எல்லா ஆயுதப்படை முகாம்களுக்கு அமைச்சர் விஜயம்செய்தார். அதிகாரிகளுடன் உரையாடினார்.

## நேரடி....

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலிருந்த பழுதடைந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் வேறு சில பொருட்களும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.

இராணுவம் முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் உருத்திரபுரம் 7–ம் வாய்க்கால் பகுதியில் பலத்த குண்டு ஒன்று வெடித்தது.

அப்போது இ. போ. ச பஸ் சேதம் அடைந்தது. சாரதியும், நடத்துனரும் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் சுமார் 15 நிமிட நேர நேரடித் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

முதல் சம்பவத்தில் காயமுற்ற பஸ் சாரதி எம். குலசேகரனும் நடத்துநர் ரி. செல்லத்துரையும் உடனடியாக கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பஸ் பழுதடைந்த நிலையில் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவத்தில் வழியில் வந்த ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இறந்தவர் உருத்திரபுரம் 8-ம் வாய்க்காலைச் சேர்ந்த ஜேம்பட் அருள்தாசன் என்ற 4 பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டது.

இவர் சம்பவதினம் மனைவியுடன் சென்று விட்டு வீடு திரும்புகையில் இச் சம்பவம் நடந்தது.

## மின்சாரம் தாக்கி மரணம்

சாவகச்சேரி, ஜன 3

வழியில் அறுந்து கிடந்த மின்கம்பியைத் தொட்டவர் மின்சாரத்தால் தாக்குண்டு அந்த இடத்திலேயே மரணமானார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 20 வயது இளைஞரான எஸ். சின்னராசா என்பவரே இந்தக் கதிக்கு ஆளானார்.

## விளையாட்டரங்கு

★ சிட்னியில் தமிழர் சாதனை! ★ ஆஸி நிலைகுலைந்தது!!

★ கவாஸ்கர் 32 ஆவது செஞ்சுரி!!!

# இந்தியா விளாசுகிறது!

## ஒருநாள் ஆட்டத்தில் 334 ஓட்டங்கள்

சிட்னி, ஜன. 3

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் டெஸ்ட் தொடர் இந்தியாவைப் பொறுத்த வரை சாதனைகள் பல சமைக்கும் களமாக அமைந்திருக்கிறது

இந்திய துடுப்பாட்ட வீரர்களின் 'விளாசல்'களினால் சிட்னி மைதானம் நேற்று இரண்டுபட்டது.

மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தை இந்திய துடுப்பாட்ட வீரர்கள் மூவர் கலகலப்படையச் செய்திருக்கிறார்கள். இந்த ஆட்டம் நேற்று ஆரம்பமானது.

முதலில் பூவா, தலையா சுண்டிப் பார்த்ததில் இந்திய அணித் தலைவர் கபில்தேவ் வெற்றி பெற்றார். அவர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்தார்.

நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை இந்திய துடுப்பாட்ட வீரர்கள் மூவர் நடத்திய களையாத துடுப்படிகளினால் ஆஸ்திரேலிய வீரர்கள் சிதறிப்போனார்கள்.

இளம் தமிழ் வீரர் கிருஷ்ணமாச்சாரி சிறிகாந்த் தமக்கே உரித்தான பரபரப்புடன் இந்தியாவின் ஆட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

அவர் வேகமாக குவித்த ஓட்டங்களுடன் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

துடுப்பாட்ட சாதனை மன்னன் சுனில் கவாஸ்கரும் சிறிகாந்தும் சிட்னி மைதானத்தை தூள் பறக்கச் செய்தார்கள்.

அவர்களது அபார ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க ஆஸி பந்து வீச்சாளர்களினால் முடியவில்லை; திணறிப்போனார்கள்.

இருவரும் மின்னல் எனப் பந்துகளை விளாசி அடித்து ஓட்டங்களைக் குவித்தனர்.

இருவரும் அடித்த பளிச்சிடும் செஞ்சுரிகள் நேற்றைய ஆட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

சிறிகாந்த் தன்னுடைய முதலாவது டெஸ்ட் செஞ்சுரியை நேற்று எட்டிப் பிடித்தார்.

சுனில் கவாஸ்கர் டெஸ்ட் உலகில் அதிக செஞ்சுரி அடித்தவர் என்ற தமது சாதனையை மேலும் உயர்த்திக் கொண்டார், இது அவரது 32ஆவது செஞ்சுரியாகும்.

ஆஸ்திரேலிய அணிக்கு நேற்று முழுநாள் ஆட்டத்தில் கிடைத்த ஒரே ஒரு ஆறுதல் பரிசு சிறிகாந்தின் விக்கெட்தான்.

சிறப்பாக ஆடிய சிறிகாந்த் 116 ஓட்டங்களைப் பெற்றபோது புரூஸ் ரீட்டின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார். அவர் 19 பவுண்டரிகளையும் ஒரு சிக்ஸரையும் அடித்தார்.

அதனையடுத்து கவாஸ்கருடன் மொகிந்தர் அமரநாத் இணைந்தார். அவரும் பந்துகளை நாலாபுறமும் சிதற அடித்து ஓட்டங்களை வேகமாகக் குவித்தார்.

நேற்று ஆட்டம் முடிவடையும்போது இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 334 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சுனில் கவாஸ்கர் 132 ஓட்டங்களுடனும், அமர்நாத் 72 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

மிகச் சோதனையான நிலையில் இரண்டாவது நாள் ஆட்டத்தை ஆஸி அணி இன்று எதிர்நோக்குகிறது.

# பாஷையூரில் உதைபந்தாட்டம் 11 அணிகள் மோதின

யாழ்ப்பாணம், ஜன 3

பாஷையூரில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று புத்தாண்டு தினத்தன்று நடைபெற்றது. பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் ஜெகன் விளையாட்டுக்கழக (ஏ) அணி சாம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட அணிக்கு வெற்றிக் கேடயத்துடன் ஆயிரம் ரூபா ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தை பெற்ற ஜெற் லைனேர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றிக் கோப்பையும் ஐந்நூறு ரூபா ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டது.

பதினொரு அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக கப்டன் டி. ஏ.எம். குணசிங்கம், பி. செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வணக்கத்துக்குரிய தந்தை பிரான்சிஸ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## றோட்டரி விளையாட்டு போட்டி...

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ் றோட்டரிக்கழகம் புத்தாண்டில் நடத்தவிருக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதிகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இந்த போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பற்றியும் அவற்றின் முடிவு திகதிகள் பற்றியும் விசாரித்துப் பல வாசகர்கள் உதயன் விளையாட்டரங்குக்கு கடிதங்கள் எழுதியும், நேரில் தொடர்பு கொண்டும் வருகிறார்கள்.

விண்ணப்ப முடிவு திகதி பற்றி றோட்டரிக் கழகம் முடிவு எடுத்தவுடன் அது பற்றி விளையாட்டரங்கில் அறியத் தரப்படும்.

## பொங்கலமுதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பொங்கல் தினம் முதல் சித்திரைப் புத்தாண்டு வரை உள்ள காலத்தை அமைதிப் பிரார்த்தனைக் காலமாகக் கணித்து, தத்தமது மதக் கோட்பாட்டுக்கு ஏற்ப ஆலயங்களிலும், பள்ளிகளிலும் நாளாந்தம் விசேஷ பூசைகளிலும் ஆராதனைகளிலும், பஜனைகளிலும் பக்திசிரத்தையுடன் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஈடுபட வேண்டும்.

எந்தவித படாடோபமும் இல்லாமல் பொங்கல் மற்றும் பெருநாட்களை மிக அமைதியாகக் கழிக்கும்படி வேண்டுகின்றோம்.

பட்டாசு கொழுத்துவது இல்லை என்று சபதம் எடுத்துக்கொள்வோமாக, பட்டாசு வியாபாரத்தில் ஈடுபட வேண்டாம் என்று வியாபாரிகளை வேண்டுகின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ் வேண்டுகோளுக்கு ஆதரவளித்து வலுவூட்டுமாறு யாழ். பிரஜைகள் இணைப்புக்குழு மற்றும் இணைப்புக் குழுக்களையும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழு கேட்டு உள்ளது.

# அதிகாரி தாக்கப்பட்டார்

யாழப்பாணம், ஜன 3

யாழ். ரயில் நிலைய அதிகாரி ஒருவர் நேற்று இனந்தெரியாத நபரினால் தாக்கப்பட்டார்.

கொழும்பு திரும்ப இருந்த யாழ்தேவி திடீர் என்று ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவதிப்பட்ட பயணிகளுக்கு உதவிக் கொண்டிருந்தார் இந்த ரயில் அதிகாரி.

அந்த நேரத்தில் தான் இந்த அதிகாரி தாக்கப்பட்டாராம்.

இச்செயல் குறித்துப் பயணிகள் வேதனைப்பட்டனர்.

மக்கள் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவரைத் தாக்குவதா? என்று பயணிகள் கவலை வெளியிட்டனர்.

## காசோலையைக் காணவில்லையா ?

மக்கள் வங்கியின் நவீன சந்தைக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் ஒருவரின் 600 ரூபா காசோலை கண்டெடுக்கப்பட்டு உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தொலைத் தொடர்பு மாவட்ட பரிசோதகர் திரு.சபாபதி இக்காசோலையைக் கண்டெடுத்து அனுப்பி வைத்திருக்கிறார். உரியவர் தகுந்த அடையாளங்களைக் காட்டி காசோலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## அறிவித்தல்

யாழ். மாவட்ட உத்தரவு பெற்ற வியாபாரிகள் (உணவு முத்திரைக்கு சாமான்கள் விநியோகிப்பவர்கள்.) அனைவரும் 4 – 1 – 1986 காலை 9·45க்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் கருத்தரங்கில் பங்கு பற்றும் வண்ணம் வேண்டுகிறேன்.

எஸ். செல்லத்துரை
தலைவர்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
வெளியிட்ட திகதி 03-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org